# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-13 | October - 2023 | Issue-05

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-


## திருச்சபை சீர்திருத்தத் திருநாள்...




**He nailed it... Condemning the Corrupt practices of the Church.
This act triggered the Reformation movement of the Church**




## மார்ட்டின் லூத்தர் புரொட்டஸ்டன்ட் திருச்சபையின் தந்தை...

அக்டோபர் 31, 1517
அவர் ஆணி அடித்தார்...
திருச்சபையின்
ஊழல் நடைமுறைகளுக்கு
சாவு-மணி அடித்தார்...
திருச்சபையில்
சீர்திருத்தம் ஏற்பட
அடித்தளம் அமைத்தார்...
**சீர்திருத்தத் திருநாள்-506**
அக்டோபர் 31, 2023

## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

அனைவருக்கும் எங்கள் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

திருச்சபை இறைமக்கள் அனைவருக்கும் இனிய சீர்திருத்தத் திருநாள் நல்வாழ்த்துக்கள். இந்திய தேசத்தின் அரசியல் ஸ்திரமற்ற சுழல் நிலவும் இந்நாட்களில் நாட்டின் அரசியல்-சாசனம் மற்றும் சட்ட-விதிகளை சிதைக்க நினைக்கும் அதிகாரவர்க்கத்துக்கும் பாசிச சக்திகளின் சதித்திட்டங்களுக்கும் எதிராக போராடவும் அதேவிதமாக திருச்சபையின் அரசியல்-சாசனம் மற்றும் சட்ட-விதிகளை சிதைக்க நினைக்கும் அதிகாரவர்க்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கவும் நம்மை அர்ப்பணிப்போம்.

இனவெறி, மதவெறி மற்றும் வன்முறை இயக்கங்களுக்கு துணைபோகும் ஒன்றிய-மாநில ஆட்சியாளர்கள் மனம்-மாற ஜெபிப்போம். சிறப்பாக, தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக ஜெபிப்போம்.

'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்களில் (அக். 13, 20, 27) இணைந்து ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணையவும், இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நமது இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம். வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்புங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 12-ல் தரப்பட்டுள்ளது).

கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-154** **எபேசியர் - 4:12**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| கிறிஸ்துவுடைய சரீரமாகிய சபையை எழுப்பி கட்டுவதற்கேதுவான ஊழியத்தின் கிரியைகட்கு பரிசுத்தவான்கள் நிறைவாக்கப்படும்பொருட்டாக தேவன் ஊழியரை ஏற்படுத்தினார். | பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காகவும் சகோதரரை ஏற்படுத்தினார். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| இறைமக்களை இறைப்பணிக்கு ஆயத்தப்படுத்தவும், திருத்தொண்டாற்றவும், கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையைக் கட்டி எழுப்பவும் தம் மக்களை கடவுள் ஏற்படுத்தினார். | கிறிஸ்துவின் பரிசுத்தவான்களின் சேவைக்காக தேவன் பல வரங்களைக் கொடுத்துள்ளார். கிறிஸ்துவின் சபை வல்லமை பெறவே கர்த்தர் வரங்களைக் கொடுத்தார். |

வசன தியானம்-145

1Cor-12:27

# திருச்சபை சீர்திருத்தம்

## பற்றி குழந்தைகளுக்கு கற்பிக்கவேண்டும்

1கொரி-12:27

**WE SHOULD TEACH OUR KIDS ABOUT THE REFORMATION**

நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையாகவும், தனித்தனியே அவயவங்களாகவும் இருக்கிறீர்கள். 1கொரி-12:27

அக்டோபர் மாதம் திருச்சபைச் சீர்திருத்தம் பற்றி பேசுகிறோம். லூதர், கால்வின், ஸ்விங்கிளி சரிதைகள் படிக்கிறோம். 95-ஆய்வறிக்கைகள்-கோட்பாடுகளை விவாதிக்கிறோம். நம் பிள்ளைகளுக்கு திருச்சபையின் பரிணாமம் குறித்து கற்பித்திருக்கிறோமா? அவர்களுக்கு சீர்திருத்தம் குறித்து ஏன் சொல்லவேண்டும்?

**1. திருச்சபை மீதான சீர்திருத்தவாதிகளின் பற்றுறுதியை தெரியப்படுத்த:**

உலகின் முதல் கிறிஸ்தவ விசுவாசிகள் நாம் அல்ல. நாம் நமது முன்னோரான விசுவாசிகளின் தோள்களில்தான் நிற்கிறோம். நம் பிள்ளைகளும் திருச்சபையின் நன்மைக்காக அறைகூவலிட்ட நம் முன்னோர்-தலைவர்களின் வாழ்வை தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, எபிரேயர் 12-ல் உள்ள மேகம்போன்ற சாட்சிகளான நம் முன்னோரின் (சீர்திருத்த வாதிகள்) வைராக்கிய விசுவாசத்தை நம் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும்.

**2. சீர்திருத்தம் ஒரு தொடர்-நிகழ்வு என்பதை தெரியப்படுத்த:**

சீர்திருத்தம் என்பது ‘முடிந்த-கதை’ அல்ல என்பதை நம் பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டும். வேதத்தின்படிதான் (சோலா-ஸ்கிரிப்சுரா) திருச்சபை சீர்-திருத்தம் நடந்தது. இயேசுவின் 2ம் வருகைவரை, சீர்திருத்தப்பணி நிறைவடையாது, எனவே, அதைத் தொடரும் அவர்களின் பொறுப்பை உணரும்படிக்கு குழந்தைகளுக்கு சீர்திருத்தம் குறித்து கற்பிக்கவேண்டும்.

**3. விசுவாசிகள் அசாதாரண செயல்-வீரர் என்பதை தெரியப்படுத்த:**

லூதர் ஒரு துறவி, கால்வின் ஒரு போதகர், கேரி ஒரு செருப்பு தைப்பவர். அவர்கள் சாதாரண மனிதர்கள் ஆயினும், முதல் நூற்றாண்டில் சில சாதாரண மீனவர்கள் மூலம் செய்ததைப் போலவே, இவர்களின் போதனை மற்றும் பாடுகள் மூலம் கடவுள் உலகத்தைத் தலைகீழாக மாற்றி மகிழ்ந்தார். இன்று தங்களைக்கூட திருச்சபைக்காக அசாதாரண சாதனை செய்வோராக கடவுள் மாற்றுவார் என்பதை நம் பிள்ளைகள் உணரவேண்டும்.

‘திருவசனம் மாத்திரமே எல்லாம்’ என்று சொல்வது மிகக்கடினமானது ஆனால் அது மகிமையில் நம்மை பரிபூரணமாக்கும். திருச்சபைக்கு, ‘சுவிசேஷமே எல்லாவற்றிலும் எல்லாம்’ இது திருமறை சத்தியம். இந்த உண்மைகளை உணர்த்தும் சீர்திருத்தம் குறித்தும் நம் பிள்ளைகள் அறிந்துகொள்ளச் செய்வது நமது கடமை. கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

சீர்திருத்தத் திருநாள் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு. சைமன் சாமுவேல்

# சீர்பொருந்த வழிவகுக்கும் சீர்திருத்தம்

## Reformation that leads to Harmony of the People of God

**Rev. D. Simon Samuel**
Presbyter, CSI Pothaturpet Pastorate - Diocese of Madras
Thiruvallur District - 631 208, Tamilnadu, South India

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். திருச்சபையானது, செப்டம்பர் மாதம், தென்னிந்திய திருச்சபை (CSI) உருவாக்கத்தை ஆசரிக்கிறது, அக்டோபர் மாதம் சீர்திருத்த திருச்சபையின் (REFORMED CHURCH) உருவாக்கத்தை ஆசரிக்கிறது. சி.எஸ் லூயிஸ் என்ற திருமறை அறிஞர் இவ்வாறு கூறுகிறார் 'எந்த ஒரு நிறுவனமோ அல்லது திருச்சபையோ, அது அபரிமிதமாக வளர்ந்து வரும் ஒரு காலகட்டத்தில், அது எதற்காக துவங்கப்பட்டதோ அந்த அடிப்படை நோக்கத்திற்கு எதிராகவும், முறையற்றும் செயல்படும்'. இவ்வாறான ஒரு நிலையைத்தான் சீர்திருத்த திருச்சபையின் தாய் சபையாகிய ரோமன் கத்தோலிக்க திருச்சபை எட்டியது. போப்-ஆண்டவர்கள் திருச்சபையின் தலைவராகிய இயேசு-ஆண்டவருக்கும் மேலானவர்களானார்கள். இயேசுகிறிஸ்து இரத்தம் சிந்தி சம்பாதித்த மீட்பை - பாவ மன்னிப்பை, பணத்திற்கு விற்றனர். இதை மிகுந்த மனதுணிவுடனும், கடவுளின் அருளோடும் எதிர்த்து நின்று, திருச்சபையின் அடிப்படை உறுப்பின ரிலிருந்து நீக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, சீத்திருத்த திருச்சபை உருவாக அடித்தளமிட்டவர் 'சீர்தித்த திருச்சபையின் தந்தை' என்று போற்றப்படும் மார்ட்டின் லூதர் என்ற கத்தோலிக்க ஆயர். ஆன்மிகத்தில் கடவுளுக்கு இணையாகவும், உலகத்தில் அரசர்களுக்கு இணையாக அதிகாரம் படைத்த போப்-ஆண்டவரை திருமறை சத்தியத்தை கொண்டு எதிர்த்து, என்ன நிலை வந்தாலும், 'இதுவே என் நிலைப்பாடு' (HREE I STAND), என்று சூளுரைத்தவர். திருச்சபையும், திருப்பணியும், நம்மை படைத்த கடவுளோடு நம்மை சீர்பொருந்த செய்யவே! இதையே அப்போஸ்தலனாகிய பவுல், ''மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு தக்க பூரண புருஷராகும்

வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்'' (எபே 4:11-12) என எபேசு சபைக்கு எழுதுகிறார். கத்தோலிக்க திருச்சபையில் இருந்து சீர்திருத்தம் அடைந்து உருவாகிய சபைகள் இன்று சீர்கெட்டுப்போயின. சீர்திருத்தம் என்பது, திருச்சபை நிர்வாகத்தை ஒரு சாராரின் பிடியிலிருந்து மற்றவர் எடுத்துகொள்வதல்ல, மாறாக, திருச்சபையின் தலைவரும் மணவாளருமான இயேசுவோடு திருச்சபையை சீர்பொருந்த செய்வதே ஆகும்.

**விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட:**

அடிப்படையில் நாம் அனைவரும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக இருந்தாலும், நாம் சார்ந்திருக்கும் திருச்சபை பிரிவு, நாம் செய்யும் திருப்பணியின் தன்மை, அந்த திருப்பணியை குறித்த நமது புரிதல் இவைகளால் நாம் பிரிந்து நிற்கவேண்டிய நிலையில் உள்ளோம். இத்தகைய நிலையில் உள்ளோம். பிரிந்திருப்பது மட்டுமில்லாமல் மற்றவர்களையும் அவர்கள் செய்யும் திருப்பணி களையும் எவ்வித காரணமுமின்றி எதிர்க்கும் மனநிலையில் உள்ளோம். இந்நிலையிலிருந்து நம்மை சீர்திருத்த நாம் அழைக்கப்படுகிறோம். கடவுள்மேல் உள்ள விசுவாசத்திலும் அவரை பற்றிய அறிவிலும் ஒருமைப்பட திருமறை நம்மை அழைக்கிறது. ''உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு, ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்'' (எபே 4:4-6) என்று சொல்லுவதோடு, ''கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது'' (எபே 4:7) என்று, நம்மில் ஒவ்வொருவருக்கும் நம்முடைய அழைப்புக்கு ஏற்ற ஈவுகள் இருப்பதை குறிப்பிடுகிறது. எனவே, ஒருவரின் ஈவை மற்றவர் குறைவாக எண்ணாமல், நாம் வெவ்வேறு பிரிவு கிறிஸ்தவர்களாக இருந்தாலும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட அழைக்கப்படுகிறோம். அப்படி ஒருமைபடுவதே தற்கால சீர்திருத்த திருச்சபையை, கடவுளோடு சீர்பொருந்திய திருச்சபையாக உருவாகும்.

**சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக:**

18 மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் இயேசுகிறிஸ்துவை குறித்து நற்செய்தி பகிரவந்த பல்வேறு மேலை நாட்டு திருச்சபையின் நற்செய்தி இயக்கங்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் சுவிசேஷ ஊழியம் செய்தனர். பல திருச்சபை பிரிவின் பின்னணியிலிருந்து வந்தவர்கள் ஓரிடத்தில் வந்து பணியாற்றிபோது, யார்-யார்? எந்தெந்த இடத்தில்? எவ்வித திருப்பணி செய்வது? போன்ற சிக்கல்கள் பல எழுந்தன. இதனை சரிசெய்ய அனைத்து சுவிசேஷ அமைப்பின் தலைவர் களும் ஒன்றுசேர்ந்து, கிறிஸ்துவை பறைசாற்றும் இப்பணியில் தங்களுக்குள் நல்லுறவை உருவாக்க, (COMITY) என்கிற ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். அதாவது, ஒரு நற்செய்தி இயக்கம் பணிசெய்ய செல்லும் இடத்திற்க்கு மற்றவர் செல்லகூடாது என்பதே. இப்படி அவர்கள் இணைந்து செயல்பட்டதால் அநேக

இடங்களில் நற்செய்தி சென்றடைந்தது, மக்களின் வாழ்வு மாறியது. இந்த சீர்திருத்தம் இன்று அதிகமாக தேவைப்படுகிறது, இதை செய்ய தவறும்போது கிறிஸ்துவையும், திருமறையையும் அறியாத மக்கள் அலைக்கழிக்கப்படுவார்கள், ஒவ்வொருவரும் தாங்கள் அறிந்தவாறு கிறிஸ்துவை போதிக்கும்போது முதலில் கருத்து முரணும் பின்னர் எல்லை முரணும் ஏற்படும். இது பின்னர் திருச்சபை பிரிவுகளுக்கு இடையே விரக்தியையும், வன்மத்தையும் உண்டாகும். எனவே, திருமறை சொல்வதுபோல், ‘‘கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணராகவும்’’ அப்படி பூரணராக்கப்பட்ட பரிசுத்தர்கள், ‘‘நான் பவுலை சேர்ந்தவன் என்றும், நான் அப்பொலோவை சேர்ந்தவன் என்றும், நான் கேபாவை சேர்ந்தவன்’’ என்றும் சொல்லாதபடி, அனைவரும் ஒருவரோடு ஒருவர் சீர்பொருந்தி, அனைவருமாக நற்செய்தி நாயகராகிய இயேசுவோடு சீர்பொருந்த, இந்த சீர்திருத்தம் வழிவகுக்கிறது.

**சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக:**

நம்முடைய விசுவாசம், அறிவு, சுவிசேஷ வேலை, இவை அனைத்தும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நாம் அங்கமாக இருந்து பக்திவிருத்தி அடைவதற்கே. அந்த திருச்சபையானது எப்பேற்பட்டது என்பதை நாம் திருமறை சார்ந்து ஆழ்ந்து அறிந்து கொள்வது சிறந்தது. கைகளால் கட்டப்பட்டது ‘சபை’ அல்ல, அது சபை கூடிவருவதற்கான ஒரு ‘இடம்’. சபையானது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சரீரம். அது இயேசுகிறிஸ்து உதிரம் சிந்தி மீட்டுகொண்ட அவரின் மணவாட்டி. அவரே அதின் மணவாளன். சபையை ஒரு இடமாக, சுயநலத்துக்கான நிர்வாக-நிறுவனமாக, ஒரு தனிநபரின் உடைமையாக எண்ணி சபைக்கு வருவோமானால் அது மிகுந்த ஆபத்தில் கொண்டு சேர்க்கும். சபை யானது பக்திவிருத்தி அடைவதற்கான இடம் மட்டுமே என்பதையும், சபையின் தலைவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே என்பதையும் நாம் தெளிவாக அறிந்துகொள்ளும்போது, நம் தனிப்பட்ட விருப்பு-வெறுப்புகளை சபையில் நாம் என்றும் அனுமதிக்கமாட்டோம். சீர்திருந்தாத கொரிந்து சபைக்கு பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ‘‘மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்கு உரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியது ஆயிற்று’’ (1கொரி 3:1). பக்திவிருத்தி அடைவதை தவிர்த்து, பொல்லாத காரியங்கள் செய்யும் இடமாக சபை மாறும்போது, நம்மால் கடவுளோடு சீர்பொருந்த முடியாது. நாம் சீர்திருந்தவே, அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகரையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் சபையில் கடவுள் ஏற்படுத்தியுள்ளார். கடவுளின் சத்தத்தை திருமறை வழியாக அறிவோம், சீர்திருந்துவோம்; அதினூடாய் கடவுளோடு சீர்பொருந்துவோம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு. டி. சைமன் சாமுவேல்**

அருட்திரு. டி.சைமன் சாமுவேல், ஆயர், பொதட்டூர்பேட்டை குருசேகரம்
(சி.எஸ்.ஐ. சென்னை பேராயம்), திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு, தென்னிந்தியா.

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் போன்றவை வேரறுக்கப்பட... பழங்குடி மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினை வாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கி∴ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ∴ப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திரு. செல்வராஜ், திருமதி. சாந்தி அலெக்ஸ், திருமதி. தங்கசெல்வன், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திருமதி. பங்கஜம் வில்சன், திரு. வெஸ்லி சாமுவேல், திரு. நெல்சன் (நகோமி), திருமதி. சுந்தரிபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. ∴பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. செல்வி பாண்டியன், திருமதி. ஜெயா சாமுவேல், திரு. ரிச்சர்டு, திருமதி. ராஜேஷ்வரி, DR.ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு. டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) திரு. பால் நந்தகோபால் அவர்களுடைய மறைவின் நிமித்தம் அவரை இழந்து வாடுகிற அவர்களுடைய குடும்பத்தாரின் ஆறுதலுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ராஜ பிரமீளா, திரு.ஜே.ஆர். டேவிட், திருமதி. சார்லட் டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மியூரியல் புஷ்பராஜ் ஆகியோரது குடும்பங்களுக்காக...

10) திருமதி. சேர்டியஸ் தாவீது அவர்கள் சுக-பிரசவத்தில் அருமையான குழந்தை பெற்றெடுக்க...

வேத ஆராய்ச்சி - 77



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

BIBLE RESEARCH CORNER
EPISODE-77

## சங்கீதம் - 77

**சங்கீதம்:** 1. நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார். 2. என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன்; இரவிலும் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது; என் ஆத்துமா ஆறுதலடையாமற்போயிற்று. 3. நான் தேவனை நினைத்தபோது அலறினேன்; நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்துபோயிற்று. 5. பூர்வநாட் களையும், ஆதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன். 6. இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து, என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்ளுகிறேன்.

**முன்னுரை:-**

இந்த சங்கீதம், ஆசாபினால் எழுதப்பட்டது. ஆசாப், தாவீது-சாலோமோன் காலத்தில் வாழ்ந்தவராகவோ அல்லது அதற்கு பின்வந்த சந்ததியைச் சேர்ந்தவ ராகவோ இருக்கலாம் என வேத-பண்டிதர்கள் கருதுகின்றனர். மிகுந்த மன சஞ்சலத்தில் இருக்கும் ஒரு தேவமனிதனின் மனக்குமுறலையும் நம்பிக்கையையும் ஆறுதலையும் இங்கு காண முடிகிறது.

**1. இருதயத்தின் விசாரம்- (வச:1-4)**

இவ்வசனங்களை நாம் வாசிக்கிறபோது, இச்சங்கீதத்தின் ஆசிரியரானவர் பெரிய ஆபத்தில் இருந்ததை நாம் உணர்ந்தகொள்ள முடிகிறது (வச-2). அது தேசத்தின் பிரச்சனையாகவோ அல்லது தனிப்பட்ட குடும்பப் பிரச்சனையாகவோ இருந்தி ருக்கலாம். ஆகையால், சங்கீதக்காரர், தனது தவிப்பையும் வேதனையையும் இங்கு வெளிப்படுத்துகிறார். 'தேவனை நோக்கிக் கெஞ்சினேன்' 'ஆண்டவரைத் தேடினேன்' 'தேவனை நினைத்தபோது அலறினேன்' 'தூங்க முடியவில்லை' 'பேச முடியவில்லை' 'சஞ்சலப்படுகிறேன்' 'என் ஆவி தொய்ந்துபோகிறது' (வச-3) போன்ற வார்த்தைகள் அவரது வியாகுல உச்சத்தைக் காட்டுகின்றன.

நாம் கூட ஏதாவது காலகட்டத்தில் இப்படிப்பட்ட அனுபவத்தைக் கடந்து வந்திருப்போம் அல்லது இனி கடந்து செல்லவேண்டிய நிலையில் இருப்போம். அப்படிப்பட்ட நிலையில் நாம் நமது பிரச்சனைகளில் மூழ்கி மடியப்போகிறோமா? அல்லது புத்துணர்வு பெற்று தேவனைச் சார்ந்துகொண்டு நம் பிரச்சனை களிலிருந்து மீண்டெழுப்போகிறோமா? இது குறித்து சங்கீதக்காரர் இங்கு பின்வரும் கேள்விகளை எழுப்புகிறார் (வசனம் 7, 8, 9).

1. ஆண்டவர் நித்திய காலமாய் தள்ளிவிடுவாரோ?
2. ஆண்டவர் இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ?

3. ஆண்டவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ?

4. வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ?

5. தேவன் இரக்கம் செய்ய மறந்தாரோ?

6. தேவன் தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ?

இந்த கேள்விகளுக்கெல்லாம் சரியான விடை, 'இல்லை' என்பதேயாகும். ஜானி எரிக்சன் டடா என்பவர், தான் சந்தித்த ஒரு நீச்சல்-குள விபத்தில் முடமாக்கப்பட்டார். அந்நிலையில் யாரோ ஒருவர் அவருக்கு சங்கீதம் 77:7-9 வசனங்களைக் காட்டி, தேவன் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார், என்றுசொல்லி உற்சாகப்படுத்தியதால் அவர் இன்று தமது 73வது வயதிலும் உற்சாகமாக ஊழியம் செய்துவருகிறார்.

எனக்கு அன்பான தேவபிள்ளைகளே! உங்களுக்கும் இப்படிப்பட்ட தருணங்கள் வந்ததுண்டானால், திடன் கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கும் உதவிசெய்ய வல்லவராய் இருக்கிறார்.

**2. கடந்த காலம் - சிந்தனை செய்:- (வச: 5)**

இந்தச் சங்கீதத்தின் கருப்பொருளே வசனம் 5ல் தான் உள்ளது. இங்கு சங்கீதக்காரர் கூறுகிறார், ''பூர்வ நாட்களையும் ஆதிகாலத்தின் வருஷங்களையம் சிந்திக்கிறேன்'' என்று. ஒவ்வொரு ஆண்டும் புதுவருட ஆராதனையில் பல சபைகளில் பாடப்படும் ஒரு பாடல் பின்வருமாறு:

கடந்த காலம் நினைத்துப்பார், கர்த்தர் உன்னை நடத்தினார்,
நடந்த பாதை திரும்பிப்பார், நல்ல மேய்ப்பன் வழி சொன்னார்,
சோர்வில் உன்னைத் தாங்கினார், சோதனையில் பெலன் தந்தார்,
நோயில் உனக்கு சுகம் தந்தார், நொந்த மனதில் திடன் தந்தார்.

எவ்வளவு தூரம் இதன் பொருளை உணர்ந்து நாம் பாடுகின்றோம்? கடந்த காலத்தில் நமது வேதனையின் நாட்களில் ஆண்டவர் நமக்குச் செய்த நன்மை களை நினைத்துப் பார்க்கிறோமா? ''கர்த்தருடைய செயல்களை நினைவு கூருவேன், உம்முடைய பூர்வகாலத்தின் அதிசயங்களையே நினைவுகூறுவேன்; உம்முடைய கிருபைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்'' (வச-11, 12) என்கிறார் சங்கீதக்காரர். மேலும், நம்முடைய தேவனைப்போல் பெரிய தேவன் யார்? என்று கேட்டு அதற்குப் பதிலாக அதிசயங்களைச் செய்கிறவர் நீரே என வச-13,14ல் பதிலளித்ததுடன், தேவன் இஸ்ரவேலரை சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடத்தி, பர்வோனின் சேனையை எப்படி வெற்றிகொண்டார் என்பதையும் அருமையாக விளக்குகிறார் (வச 15-19). ''உமது வழி கடலிலும் உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களண்டையிலும் இருந்தது; உமது காலடிகள் தெரியப்படாமல் போயிற்று.'' (வச-19) அதாவது, தேவனுடைய நடத்துதலை கண்ணால் காணமுடியாவிட்டாலும், அவருடைய காலடிகள் தென்படாவிட்டாலும் தேவன் ஆபத்தினின்று நம்மை விடுதலையாக்கி தம் எதிரிகள் மீது வெற்றிசிறப்பவர் கடவுள், என்று கடவுளின் வழிநடத்துதல் குறித்து கூறுகிறார்.

சங்கீதங்கள் வேத-ஆராய்ச்சி தொடர்ச்சி பக்கம்-12ல்....

# வேதாகம போட்டி–155 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அரோமா சாத்ராக் TIN
12) ஆர்தர் மாசில்லாமணி CHE
13) அருள்செல்வி VIR
14) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
15) பாமா மாதவன் KAL-AP
16) பாலின் பிரியங்கா ஜாண் BAN
17) பெல்சி தங்கராஜ் CHE
18) பெனிட்டா பிராங்க்ளின் CHE
19) பியூலா ஜேசுராஜன் PON
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) சந்திராபாய் மாசிலாமணி AVD
22) சந்திரலேகா KAL-AP
23) சந்திரா மேரி விஜயன் BAN
24) சந்திரா சாமுவேல் TIN
25) சார்லஸ் ஃபின்னி DR CHE
26) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
27) சார்லட் டேவிட் CHE
28) சித்ரா பெஞ்சமின் TVL
29) சிட்டி TR. TVL
30) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
31) கிறிஸ்துதாஸ் GOP
32) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR-TIN
33) கிறிஸ்டி ஞானராஜ் CHE
34) கிறிஸ்டி மெர்சி TUT
35) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
36) டெய்ஸி ஜெபதாஸ் TCY
37) டெய்ஸி சாம் TUT
38) டேனியல் தாமஸ் TIN
39) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
40) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
41) தெபோராள் ஆனந்தமணி TUT
42) தேவமணி ஆபிரகாம் TUT
43) தேவநேசம் ராஜாசிங் CHE
44) டோராபாய் CHE
45) எலிசபெத் செல்லத்துரை CHE
46) எமிமாள் (ஜெஸிக்கா) சாமுவேல் MDU
47) எஸ்தர் D.R. TIN
48) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
49) குளோரி ரவீந்திரன் TIN
50) ஞானம் ஜெபராஜ் TIN
51) ஞானம் பிலிப் CHE
52) ஞானராணி G. TVL
53) ஞானசெல்வி மோசஸ் USA
54) ஞானசுந்தரி நாகராஜன் TIN
55) கோல்டா ஜேசுபாதம் MUM
56) கிரேஸ் டேனி TEN
57) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
58) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
59) கிரேஸ்லின் சாந்தி TIN
60) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
61) கிரேனா அன்புரோஸ் CHE
62) கிரேஸியா ஜெயபால் CHE
63) கிரிசெல்டா செய்லர் CHE
64) ஹெலன் ஜான்சிராணி TIN
65) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
66) ஹெலன் திலக் TUT
67) ஹேமா அஜீத் CHE
68) ஹேமா கேப்ரியேல் BAN
69) ஹெப்சி அசரியா PON
70) ஹெப்சிபா மங்களராஜ் TIN
71) ஹிம்லா ராஜகுமாரி CHE
71) இளவரசி ஜோபிதா CBE
72) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
73) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
74) ஜமீலா செல்வராஜ் CHE
75) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
76) ஜேன் தர்மராஜ் TIN
77) ஜான்ஸி ராணி CHE
78) ஜான்ஸி சந்தியா MKM
79) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE

80) ஜெபா ஜெயராஜ் CHE
81) ஜெபக்குட்டி மோசஸ் TIN
82) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
83) ஜெபசீலி கிளின்டன் CHE
84) ஜெபா சீனி MAR TIN
85) ஜெபஸ்டின் G. TIN
86) ஜெமீலா நிக்ஸன் CHE
87) ஜெனிலா CHE
88) ஜென்ஸி ஞானேஷ் MUM
89) ஜெனித்தா செல்வின் TIN
90) ஜெனிட்டா ஹெலன் CBE
91) ஜெரின் ஸ்டீபன் MUM
92) ஜெஸி செல்லதுரை CBE
93) ஜெஸி ஜெயக்குமார் TIN
94) ஜோனா ஸ்டீபன் AVD
95) ஜாய்ஸ் பாண்டியன் CHE
96) ஜுலியட் ஜெபா CHE
97) ஜுலியட் ஜெயக்குமார் TIN
98) கலா கிருபாகரன் TIN
99) கலையரசி செல்வராஜ் CHE
100) கஸ்தூரி எலியாஸ் TIN
101) கிங்ஸ்லி தங்கமணி CHE
102) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
103) லதா மைக்கேல்ராஜ் CHE
104) லீலா டேவிட் CHE
105) லீலா ஜோஸப் CBE
106) லீனா எலிசபெத் TPT
107) லில்லி ஜாண்ஸன் CHE
108) லிஸி டென்சிங் TIN
109) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
110) மல்லிகா V. CHE
111) மணிமேகலை ஜெயக்குமார் TIN
112) மனோகரம் தனராஜ் NAZ
113) மரிய பாப்பா CHE
114) மரியாள் ஜே.எஸ். TUT
115) மேபல் கிறிஸ்டியான் CHE
116) மெஜிலா ஜோஷ்வா TUT
117) மெர்சிபா CBE
118) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
119) மெரிட்டா ஜெயபாலன் TCY
120) மியூரியல் புஷ்பராஜ் CHE
121) நிக்ஸன் எவர்பிரைட் TIN
122) ஆலிவ் ஜெயபாலன் CBE
123) பாக்யபாய் ஆரோன் TIN
124) பமீலா எட்வின் NAG
125) பொன்மணி உத்தமசிங் NAZ
126) பிரேமா பூபாலன் AVD
127) பிரேமா ஜாணி PCM
128) பிரேமா ஸ்டாலின் CHE
129) பிரின்ஸ் தயாநிதி CHE
130) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
131) பிரிசில்லா தாஸ் CHE
132) பிரிஸ்கில்லாள் சசி CBE
133) ரேச்சல் ஈஸ்டர் VEL
134) ரேச்சல் கனகராஜ் CBE
135) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
136) ராஜபிரமீளா TPT
137) ராஜ்மேரி சார்லஸ் KER
138) ரமோலா அதிசயராஜ் TIN
139) ராணி ஃபுளோரா APM-TEN
140) ராணி பிரபாகர் TIN
141) ராணி சாமுவேல்ராஜ் CHE
142) ரத்னா டென்னிஸன் CBE
143) ரத்னாவதி பாண்டியன் CHE
144) ரெஜினா விக்டர் TIN
145) ரோஸ்லின் மார்கிரெட் CHE
146) ரூபவதி நோபிள் TIN
147) ரூத் TCY
148) ரூத் ஜாண்ஸன் TIN
149) சலோமி மனோகர் DR. CHE
150) சம்பு ஜெயச்சந்திரன் MDU
151) சாமுவேல் டேவிட் TPT
152) சாரா பாலசிங் MDU
153) சரோஜினி எலிசபெத் CHE
154) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
155) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
156) செல்வராஜ் K. CBE
157) செல்வராணி ஆல்பர்ட் CHE
158) செல்வராணி G. CHE
159) செல்வி அமிர்தராஜ் TVR
160) ஷாலி எடிசன் CHE
161) சாந்தி ஆல்பர்ட் PCT
162) சாந்தி ஆசேர் TIN

பட்டியல் தொர்ச்சி பக்கம் 19ல்...

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் அக்டோபர் -2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 13-10-2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 20-10-2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 27-10-2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**MOBILE:** 9962924900/7871676100
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL:**sjddharmaraja@gmail.com
**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
**WEBSITE:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY:**

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK AND BR.: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.
GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:
REV. DHARMARAJA SJD: 9789914463

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: **9789914463**

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

..... சங்கீதங்கள் வேத-ஆராய்ச்சி. 9ம் பக்கத் தொடர்ச்சி.

**முடிவுரை:-**

அன்பானவர்களே! நமது பிரச்சனைகள் எவ்வளவாய் இருந்தாலும், தேவன் நமக்கு உதவிசெய்ய வல்லவர். நம்முடைய முற்பிதாக்களுக்கு உதவிசெய்த ஆண்டவர் நம்மிலும் நமது குடும்பத்திலும் உள்ள விசாரங்களை மாற்றி மகிழ்ச்சியைத் தருவார். தொடர்ந்து விடாப்பிடியான விசுவாசத்தோடு தேவனைப் பற்றிக்கொள்ளுவோம். கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-156

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-10-2023

**வேத–பகுதி: மத்தேயு சுவிசேஷம் முழுவதும்**

1. இயேசு, நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சுகமாக்கியது எந்த ஊரில்?

2. மனுஷகுமாரன் இரவும் பகலும் 3-நாள் எங்கு இருப்பார் என இயேசு சொன்னார்?

3. ‘நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து’ - சொன்னது யார்?

4. ‘அவள் பரிசுத்த ஆவியால் கர்பவதியானாள் என காணப்பட்டது’ - ‘அவள்’ யார்?

5. பிசாசின் சோதனைக்காக இயேசுவை வனாந்தரத்துக்கு கொண்டுபோனது யார்?

6. ‘அறுப்பு மிகுதி; வேலையாட்களோ கொஞ்சம்’ யார்? யாரிடம் சொன்னது?

7. ‘ஆனாலும், எலியா வந்தாயிற்று’ - யாரைக்குறித்து இயேசு இப்படி சொல்கிறார்?

8. ‘தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா’ - என தேவாலயத்தில் ஆர்ப்பரித்தது யார்?

9. ‘உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது’ - **சரியா, தவறா**?

10. ‘பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து பாடும்’ -**சரியா தவறா**?

11. ‘உள்ளதை உள்ளதென்றும் நல்லதை நல்லதென்றும் சொல்லுங்கள்’ -**சரியா தவறா**?

12. ‘கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது’ -**சரியா தவறா**?

13. ஆவி உற்சாகமுள்ளதுதான்; ‘இதுவோ’ பலவீனமுள்ளது:
அ) ஆத்துமாவோ ஆ) இருதயமோ இ) வார்த்தையோ ஈ) மாம்சமோ

14. பரலோகராஜ்யம் தன் குமாரனுக்கு கலியாணம் செய்த ‘**இவருக்கு**’ ஒப்பாயிருக்கிறது:
அ) அதிபதிக்கு ஆ) மந்திரிக்கு இ) மனிதருக்கு ஈ) ராஜாவுக்கு

15. பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களை தேடுகிற ‘**இவருக்கு**’ ஒப்பாயிருக்கிறது:
அ) ராஜாவுக்கு ஆ) வியாபாரிக்கு இ) பிரபுவுக்கு ஈ) செல்வந்தருக்கு

16. ‘**இவனும்**’ இவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்:
அ) பார்வோன் ராஜா ஆ) நீரோ ராஜா இ) கோரேஸ் ராஜா ஈ) ஏரோது ராஜா

17. குளிக்க வந்தார் ‘குற்றாலம்’ அல்ல! நதிக்கு வந்தார் ‘நயாகரா’ அல்ல! அருகே வந்தார் ‘அருவி’ அல்ல! முழுக வந்தார், கழுவ வந்தார்! நீதி நிறைக்க வந்தார், ஆவி நிரப்ப வந்தார்? **வந்தது யார்? எங்கு வந்தார்?**

18. கத்தி, கத்தி கனைத்தாலும் கிடைக்காது! கடவுளே, கடவுளே, என்றாலும் கிடைக்காது1 சித்தம் செய்தால் கிடைக்கும்! சீர்-கனி தந்தால் கிடைக்கும்! **இது என்ன**?

19. பெண்ணில் பிறந்தவன், பெரியவன் பெரியவன்! சொர்க்கத்தில் சிறியவன் இவன், சிறிதிலும் சிறியவன்! சொர்க்கத்தில்-சிறியவன், இவனிலும் பெரியவன்! **இவன் யார்?**

20. கொலையும் கொள்ளையும் கூடிவரும் இங்கிருந்து! பொய்யும் புரட்டும் புரண்டுவரும் இங்கிருந்து! பாலியல் மோகம் பாய்ந்துவரும் இங்கிருந்து! **இது எங்கிருந்து?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-10-2023 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்



SIS.C. ANGEL

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு தரிசனமாகி: பராக்கிரம சாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். நியா–6:12

The angel of the Lord appeared to Gideon and said unto him: "The Lord is with thee, thou mighty man of valour". Jud-6:12

THE ANGEL OF THE LORD HA MALAK YAHWEH

## கர்த்தருடைய தூதனானவர்

EPISODE - 53 ஹா மலாஹ் யாஹ்வே பாகம் - 53

தண்ணீர்கள் உடைந்தோடுவதுபோல, சத்துருக்களை, தேவபிள்ளைகளுக்கு முன்பாக ஒடப்பண்ணுகிறவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு 'பாகால் பிராசீம்' வாழ்த்துக்கள்!

**உன்னோடு கூட (நம்மோடு கூட) கர்த்தர் இருப்பதால் வரும் பலன்:**

**நியா-6:11** கர்த்தருடைய தூதனானவர் வந்து ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்தார். ஏன்? கர்வாலி மரத்தின் வெட்கத்தின் நிந்தையை நம்மைவிட்டு நீக்குகிறார். மீதியானியரை முறியடிக்க தமது பெலத்தினால் அபிஷேகிக்கிறார். அவரைத் தரிசிக்கிற பாக்கியத்தை நமக்கும் தருகிறார்.

**ஆதி-22:11** ஆபிரகாமை பேர்சொல்லி அழைத்த தேவன் (கர்த்தருடைய தூதனானவர்) தமக்குக் கீழ்ப்படிந்து பயபக்தியாயிருக்கிற தமது பிள்ளைகள் அனைவரையும் பெயர்சொல்லி அழைத்து, ''நான் உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்'' என்று தமது பேரில் ஆணையிடுகிறார்.

**யாத்-14:19** தேவனுடைய தூதனானவர் தமது பிள்ளைகளுக்குப் பின்னாக நடந்ததால், வெளிச்சம் வழிகாட்டியது. பின்தொடர்ந்து வந்த எகிப்தியரையோ மேகமும் இருளும் அந்தகாரமும் மூடியது.

**மல்-3:1-3** தமது ஆலயத்துக்குத் தீவிரமாய் வந்து சுத்திகரிப்பதால் மனிதரின் சிந்தனைகளில் மாற்றம், தெய்வீக சந்தோஷம், ஒருமனம், சமுதாயத்திலும் அரசியலிலும் உண்டாக்குகிறார். இதுவே தேசதின் ஆசீர்வாதம்.

**ஜெபம்:** எங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வணங்கிய தேவனும், நாங்கள் பிறந்த நாள் முதல் இந்நாள்வரை எங்களை ஆசீர்வதித்த தேவனும், எகிப்தின் சேனை போன்ற எல்லா தீமைக்கும் நீங்கலாக்கி எங்களை மீட்ட கர்த்தரின் தூதனுமானவரே! உமக்கு மகிமையுள்ள கீர்த்தியுண்டாவதாக. 'பூமியில் நீங்கள் மிகுதியாய் பெருகக்கடவீர்கள்' என்ற ஆசீர்வாதம் எங்களுக்கு சுதந்தரம் ஆவதாக. நீர் செய்த மகா நன்மைக்குத் தக்கதாக உமது கிரியைகளையும், துதியையும் பிரஸ்தாபம் பண்ணுவோம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோதரி.C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி, தென்னிந்தியா.

தேன்-துளி வேத வசனக் கதை-149

## நம் உள்ளத்திலும் இல்லத்திலும் இயேசு வரும்போது

# பெருகும் ஆசீர்வாதங்கள்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

ஸ்காட்லாந்து இளவரசர் ஒருவர் தமது பொன்விழா ஆண்டிலே, நாட்டின் 50-குடியானவர்களுக்கு வெகுமதிகள் வழங்க நினைத்தார். அதன்படி 50குடியானவர்களை அழைத்து, 'உங்களுக்கு என்ன வெகுமதி வேண்டும்? கேளுங்கள்' எனக்கூறினார். அவர்களில் பலர், விவசாயம் செய்ய நன்செய் நிலம் வேண்டும் என்றனர். சிலர், வியாபாரம் செய்ய சிறிய கடை வைத்து தரும்படி கேட்டனர். வேறு சிலர், அரசுப்பணி தரும்படி கேட்டனர். இளவரசரும் அவர்கள் விரும்பியதைக் கொடுத்து அவர்களை மகிழச்செய்தார்.

'ரூஸ்வெல்ட்' என்ற குடியானவன் மட்டும் ஒன்றும் கேட்காமல் அமைதியாக இருந்தான். இளவரசர் அவனைப் பார்த்து, '49பேர் வெகுமதிகளை கேட்டுப் பெற்றுக்கொண்டார்கள்; நீயும், உனக்கு என்ன வேண்டுமென்று கேள்' என்றார். 'ரூஸ்வெல்ட்' மிகவும் நடுக்கத்துடன் இளவரசரின் காலில் விழுந்து, 'இளவரசே, என் குடிசைக்கு நீங்கள் வரவேண்டும், அதுவே என் ஆசை' என்றான். இளவரசரும், குறிப்பிட்ட நாளில் அவனது வீட்டுக்கு வருவதாக வாக்களித்தார்.

நாட்கள் சென்றன; இளவரசரின் வருகையை முன்னிட்டு ரூஸ்வெல்டின் குடிசையை அமைச்சர்கள் ஆய்வு செய்தனர். குடிசை மிக மிகச் சிறியதாய் இருந்ததால், அமைச்சர் உத்தரவுப்படி அது அகற்றப்பட்டு ஒரு அழகான வீடு கட்டப்பட்டது. பளிங்குத் தரை மற்றும் தேக்கு மரக் கதவு-ஜன்னல்கள் அமைக்கப்பட்டு, நேர்த்தியான ஆசனங்கள் போடப்பட்டன. அறுசுவை உணவு சமைப்பதற்கு சமையலறை அமைக்கப்பட்டது. குடிசைக்குச் செல்லும் பாதை மிக மோசமாக இருந்ததால், அமைச்சர் உத்தரவுப்படி நல்ல சாலையும் ஒளி விளக்குகளும் அமைக்கப்பட்டன.

குறித்த நாள் வந்தது; இளவரசர் ரூஸ்வெல்டின் வீட்டுக்கு வந்தார். முன்னதாக, ரூஸ்வெல்ட் மற்றும் குடும்பத்தாருக்கு உயர்ந்த ஆடைகள் வழங்கப்பட்டன. இளவரசர் விருந்துண்டு மகிழ்ந்து, ஏராளமான பொற்காசுகளை ரூஸ்வெல்டுக்குக் கொடுத்து, வாழ்த்தி விடைபெற்றார். பரிசாகக் கிடைத்த பொற்காசுகளைக் கொண்டு ஏராளமான சொத்துக்களை வாங்கிய ரூஸ்வெல்ட் குடும்பத்தோடு மகிழ்ச்சியாய் வாழ்ந்தான்.

பிரியமானவர்களே! ரூஸ்வெல்ட், இளவரசரை வரவேற்றதைப்போல் நாமும் இயேசுவை நம் உள்ளத்திற்கும் இல்லத்திற்கும் வரவேற்று அவரது போதனைகள், அவரது நல்ல பண்புகளான அன்பு, தாழ்மை, இரக்கம் ஆகியவற்றை கடைபிடிப்போமானால், இயேசு ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகாரமான நிலைகளில் நம்மை ஆசீர்வதிக்க வல்லவராய் இருக்கிறார். வேதம் இவ்வாறு கூறுகிறது.

கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள். யோவா 16:24.

நீங்கள் பெற்றுக்கொள்ளுவோமென்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். மாற் 11:24.

நீங்கள் என் நாமத்தினால் பிதாவிடம் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்கு தருவார். யோவா 16:20.



சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, 'Ratchippu' Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

EPISODE 15

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-3 பகுதி-5

### 3. ஐரோப்பிய - ஆசிய தொடர்பும் மோதலும்:

### 5. போர்த்துகீசியர்களின் போட்டியாளர்கள்:

அக்பரோ அல்லது போர்த்துகீசியர்களோ அவர்கள் ஆட்சியில் மாபெரும் வரலாற்றுப் புரட்சிகள் நிகழ்ந்துகொண்டிருந்ததை முழுமையாகப் புரிந்துகொண்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால் உண்மையில், கடல் மற்றும் கடல்-வழி மேலாதிக்கம் இத்தாலியரின் கைகளை விட்டு வெளியேறியது. முஸ்லீம்கள், மத்திய தரைக்கடல் போரில் வளர்க்கப்பட்டனர். முஸ்லீம்கள் போர்த்துகீசியர்களுக்கு எதிரான வெறுப்பை இந்திய கடல் எல்லைக்குள் கொண்டு சென்றனர்.

இது போன்றே ஐரோப்பிய-மேற்கில் மதக் கலவரத்தின் துயரமான நினைவுகளை தேசங்கள் பலவும் பகிர்ந்து கொண்டு சென்றன; நெதர்லாந்தின் தாழ்வான பகுதிகளில் ரோமன் கத்தோலிக்கர்கள் நிகழ்த்திய சீற்றங்களும், இந்தியாவில் டச்சுக்காரர்கள் போர்த்துகீசியர்களுக்கு கொடுத்துவந்த பதிலடியும் முற்றிலும் இயற்கையாகவே தோன்றியது.

கி.பி 1501ல், வாஸ்கோடகாமா இரண்டாவது முறையாக மீண்டும் இந்தியாவிற்கு வந்து கண்ணனூரில், ஒரு வர்த்தக வணிகத்தை நிறுவினார். மன்னர் ஜாமோரின், அவரை வரவேற்று அவர்களுக்கு சில உரிமைகளை வழங்கினார். கோழிக்கோடு, கண்ணனூர் மற்றும் கொச்சி ஆகியவை வர்த்தக இணைப்புகள் கொண்ட நகரங்களாக நிறுவப்பட்டதால் இந்தியாவில் இவை முக்கியமான போர்த்துகீசிய காலனிகளாக மாறின. அரேபிய வணிகர்கள் போர்த்துகீசிய கலாச்சாரம் மற்றும் செல்வச் செழிப்பின்மீது பொறாமை கொண்டனர். மேலும், போர்த்துகீசியர்கள் மற்றும் உள்ளூர் ஆட்சியாளர்களான ஜாமோரின் ஆகிய இருவருக்கும் இடையே விரோதம் வளர்ந்து அதிகரித்து, இறுதியில் இராணுவ மோதலில் முடிந்தது.

போர்த்துகீசியர்கள் ஜாமோரின் மன்னரை வெற்றிகொண்டனர். ஜாமோரின் மீதான வெற்றியால் கோழிக்கோடு, கண்ணனூர் மற்றும் கொச்சி போன்ற பகுதிகள் மீதான போர்த்துகீசியரின் வியாபார மற்றும் இராணுவ ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஜேசுயிட்கள் போர்த்துகீசிய இந்தியாவின் வர்த்தகத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தினர், மராட்டியர்கள் கி.பி.1739ல் கோவாவை தாக்கினர். போர்த்துகீசியர்களுக்கு இந்தியாவில் போதிய ராணுவ பலம் இல்லாததாலும், அவர்களுடைய கடற்படை சக்தியின் வீழ்ச்சியாலும், பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புகளாலும் தோல்வியடைந்தனர். வைஸ்ராய் அல்பு கெர்கியின் மரணத்திற்குப் பிறகு, போர்த்துகீசிய அரசால் இந்தியாவுக்கு எந்த வலிமையான நபரும் அனுப்பப்படவில்லை, இதன் விளைவாக இந்தியாவில் போர்த்துகீசின் வீழ்ச்சி தொடங்கியது. இந்தியாவில் போர்த்துகீசிய நிர்வாகம் மிகவும் ஊழல் நிறைந்ததாக இருந்தது. அதிகாரிகளின் சம்பளம் மிகக் குறைவாக இருந்ததால், அவர்கள் லஞ்சம் வாங்க தயங்கவில்லை. போர்த்துகீசிய அதிகாரிகள் மக்கள் படும் துன்பங்களைப் பொருட்படுத்தாமல், பணம்-பொருள் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தனர். இறதியில், இந்தியாவில் போர்த்துகீசிய ஆட்சி வீழ்ச்சி அடைந்தது.

**போர்த்துகீசிய தலைமை இந்தியாவில் தோல்வியடைய காரணங்கள்:**

1. வர்த்தக காலனித்துவ சக்தியின் மகத்தான சுமையை தாங்க முடியாத அளவுக்கு போர்ச்சுகல் ஒரு சிறிய தேசமாய் இருந்தது.

2. போர்த்துகீசியரின் புகழ் மற்ற காலனித்துவ சக்திகளின் விரோதத்தை அவர்களுக்கு சம்பாதித்துத் தந்தது.

3. போர்த்துகீசியரின் கடுமையான மதக் கொள்கைகள் இந்தியாவின் முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களை ஒருவரையொருவர் விரும்பத்தகாதவர்கள் ஆக்கியது. இதன் காரணமாக அவர்கள் போர்த்துக்கீசிய மற்றும் இந்திய கிறிஸ்தவர்களை வெறுக்கத் தொடங்கினர்.

இந்தியாவின் பூர்வீக ஆட்சியாளர்களும் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் போர்த்துகீசியரின் எதிரிகளாக மாறிவிட்டனர். போர்த்துகீசிய வைஸ்ராய்களான அல்புகெர்கியின் வாரிசுகள் திறமையற்று இருந்ததால் அவர்களால் இந்தியாவின் மீது போர்த்துகீசியரின் கட்டுப்பாட்டை அதிகரிக்க முடியவில்லை.

**இந்திய கிறிஸ்தவத்திற்கு போர்ச்சுக்கலின் பங்களிப்பு:**

எது எப்படி இருப்பினும், இந்தியாவுக்கு நேரான கடல் வழியை நிறுவிய முதல் ஐரோப்பியர்கள் போர்த்துகீசியர்களே. இந்தியா மற்றும் ஆசியா முழுவதும் கிறிஸ்தவத்தை பரப்பிய முதல் மேற்கத்தியர்கள் போர்த்துகீசியரே.

அவர்கள் இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரையில் வாழ்ந்த மக்களை கத்தோலிக்க மதத்திற்கு மாற்றினர். கி.பி-1556ல், அவர்கள் இந்தியாவில் முதல் அச்சு இயந்திரத்தை உருவாக்கினர்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடர்ச்சி பக்கம்-19ல்....

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## Good Tidings Bible-Prints Ministries

### (GOOD SEEDS - எமது கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.3000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| **No.&Title of the Tract** | **Sponsor's Name** |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

## வேதாகம போட்டி–155 சரியான பதில் அளித்தோர் பட்டியல்

....11ம் பக்கத் தொடர்ச்சி

163) சாந்தி ஜெயசீலன் CHE
164) சாந்தி ரோஸ் CBE
165) ஷர்மீளா செல்வராஜ் DR. CUD
166) ஷேபா சந்தோஷ் CHE
167) ஷீபா சாம்ஸன் CHE
168) ஷீலா G. PNR-TVL
169) ஷெரீன் ஜெபராஜ் PAN
170) சவுந்தரம் சாலமோன் CHE
171) ஸ்ரீஜா ஃபிராங்க்ளின் CHE
172) ஸ்டெல்லா டேவிட் TUT
173) ஸ்டெல்லா கனகராஜ் CHE
174) ஸ்டெல்லா சூசையப்பா TUT
175) சுகிர்தா ஆல்வின் CHE
176) சுகிர்தா சின்னதுரை TIN
177) சுஜாதா சாமுவேல் CHE
178) சுமித்ரா B. CHE
179) சுந்தரி அன்பழகன் TEN
180) சுசீலா தியோடர் TCY
181) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
182) தனசீலி ஞானராஜ் CHE
183) தாரா மாணிக்கம் CHE
184) தெல்மா ஸ்டேன்லி MDU
185) உமா குளோரி CHE
186) வனஜா ஹெர்பர்ட் TIN
187) வசந்தா அன்பன் TIN
188) வசந்தா சந்திரசேகர் CBE
189) வசந்தி கருணாகரன் CHE
190) வசந்தி வாசன் CHE
191) விஜி டேனியல் CHE
192) விண்ணரசி ரோஸ் CHE
193) வினோலியா வில்சன் VAN
194) வைலட் கிறிஸ்டோபர் TIN
195) வைலட் சைரஸ் CHE

## வேதாகமப் போட்டி-154 சரியான பதிலளித்தோர்

1) ஹேமா அஜித்
2) இந்திரா கெத்சி டேவிட்
3) ஜென்ஸி ஞானேஷ்
4) மேபல் கிறிஸ்டியான்
5) பிரிஸ்கில்லாள் சசி
6) செல்வ அமுதா ஜார்ஸ்

## வேதாகம போட்டி–155 (நாகூம்–மல்கியா) சரியான விடைகள்

1. செருபாபேல் ஆகா:-2:23
2. யோசுவா சக:-3:3
3. ஆரோக்கியம் நாள் மல்:-4:2
4. இரதங்கள் நாகூ:-2:4
5. துன்மார்க்கன் ஆப:-1:16
6. மிருதுச்செடி-புருஷன்-தூதன் சக:-1:10
7. சமுத்திரக்கரை தேசம் செப்:-2:6
8. கர்.தொழ.எருச.வராதோர் சக:-14:17
9. சரி மல்:-2:7
10. சரி ஆப:-2:11
11. சரி நாகூ:-1:3
12. தவறு சக:-2:8
13. ஈ - இரதங்கள் நாகூ:-2:4
14. இ - கர்த்தரின் 7-கண்கள் சக:-4:10
15. அ - பேச்சுகள் மல்:-3:13
16. ஈ - சிநெயார் தேசத்தில் சக:-5:11
17. தேவன் ஆப:-3:3-6
18. மரக்கால் சக:-5:6-11
19. இரதங்கள் நாகூ:-2:3-4
20. முப்பது வெள்ளிக்காசு சக:-11:12-13

.... இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு 17ம் பக்கத் தொடர்ச்சி

ஆரம்பகால அறிவியல் அச்சுப்பிரதியான, ‘இந்திய மருத்துவ தாவரங்கள்’ கி.பி-1563ல் கோவாவில் வெளியிடப்பட்டது. புகையிலை வளர்ப்பு போர்த்து கீசியர்களால் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope’s College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th October 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.



# செய்தித்துளிகள்

1. இதுவரை சுமார் 4500 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியுள்ள அமெரிக்க ராக்கெட் நிறுவனமான ஸ்பேஸ்-எக்ஸ், கடந்த செப்-15ல், 22ஸ்டார்லிங் செயற்கை-கோள்களை ஃபல்கன்-9 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தியது.

2. இந்திய பெருங்கடல் பகுதியில் சீன ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், 2035-ம் ஆண்டுக்குள் இந்திய கடற்படையில் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை 175ஆக அதிகரிக்க ரூ.2 லட்சம் கோடியில் ஒன்றிய அரசு திட்டம்.

3. மருத்துவ உபகரண உரிமம்-பதிவு மற்றும் மருத்துவ உபகரண தர-பரிசோதனை ஆகியவை கட்டாயமாக்கப்பட்டு அதன்படி தமிழ்நாட்டில் 5ஆய்வகங்கள் உட்பட நாடு முழுவதிலும் 39ஆய்வகங்கள் அமைக்க ஒன்றிய அரசு அனுமதி.

4. 'பைக்' வாடகை திட்டமான 'ராயல் என்ஃபீல்டு' நிறுவனத்தின் 'ரென்ட்-ரைடு-ரிப்பீட்' திட்டம் இந்தியாவில் அறிமுகம். சென்னை, மனாலி, டெல்லி, சிம்லா, சண்டிகர், கொச்சின் கோவா உள்ளிட்ட 26நகரங்கள் இத்திட்டத்தில் இணைப்பு.

5. ஒடிஐ-50-ஓவர் கிரிக்கெட் உலக கோப்பை-2023 அக்-5 முதல் நவ-19 வரை இந்தியாவில் நடைபெறும் நிலையில், டி-20 உலக-கோப்பை தொடர் 2024-ஜுன் 4முதல் 30வரை மே.இ.தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவிருக்கிறது.

Posted on: 10th October 2023

To

# சீர்திருத்த திருநாள்

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் **நல்வாழ்த்துக்கள்**

அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், பங்காளர்கள், படைப்பாளர்கள், கைப்பிரதி களப்பணியாளர்கள், திருச்சபை போதகர்கள் மற்றும் இறைமக்கள், இரட்சிப்பு-குடும்பத்தார் மற்றும் விசுவாச-குடும்பத்தார் அனைவருக்கும் எங்கள் உள்ளம் நிறைந்த
**சீர்திருத்த திருநாள்-2023**
**மற்றும்**
**சீர்திருத்த ஞாயிறு**
**நல்வாழ்த்துக்கள்.**




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.